# காலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 01 சனிக்கிழமை 17.08.2024 | அதிர்வு 015


## சகோதரனுடன் மோ.சைக்கிளில் பயணித்த பெண் பரிதாபச் சாவு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் கீழே வீழ்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

05▶



# நாமலை மக்கள் தூக்கி வீசுவார்கள்

## அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில

"கோட்டபய ராஜபக்ஷவுக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் மக்கள், ராஜபக்ஷர்கள் குடும்பம் மீது வைராக்கியத்துடன் உள்ளார்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 3 சதவீத வாக்குகளைப் பெறுவது கூடபொதுஜனபெரமுனவின்ஜனாதிபதிவேட்பாளர்நாமல்ராஜபக்ஷவுக்குச்சவாலானது.97சதவதமானமக்கள், நாமலைத் தூக்கி வீவார்கள்."

- இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

05▶

## போதைப்பொருள்களுக்கு எதிரான வேட்பாளர்களை வெல்ல வைக்குக!

### மக்களிடம் பகிரங்கக் கோரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி எதுவாகவிருந்தாலும் மதுசாரம் மற்றும் சிகரெட்டுக்கு எதிராகச் செயற்படும் வேட்பாளர்களைக் கண்டறிந்து அவர்களை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் பொதுமக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

அத்துடன் மதுசார உற்பத்தி நிறுவனங்கள், புகையிலை உற்பத்தி நிறுவனங்கள்,கஞ்சாவை சட்டரீதியாக்க முயற்சிப்பவர்களின் செயற்பாடுகளுக்கு எதிரான கொள்கையை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில்

05▶



ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அரசியல் குத்துக்கரணங்கள், அந்தர் பல்டிகள் தாராளமாக நடக்கின்றன.

பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவை சிறுபான்மை இனத்தவரான முஸ்லிம்களின் கட்சிகள்தான். அவர்களின் முக்கிய கட்சிகள் எல்லாம் சஜித்தின் பக்கம். ஆனால் எம்.பிக்கள் பலரும் ரணிலுடன் அணி வகுத்து விட்டனர்.

பழுத்திருக்கும் மரத்தின் பக்கம்தான் வௌவால்கள் பாயும். செப்டம்பர் 22ஆம் திகதி வரை அதிகாரம் பழுத்திருக்கும் மரம் ரணில்தான். அதனால்தான் வர்த்தக சமூகமான முஸ்லிம்களின் பிரதிநிதிகள் லாப – நட்ட நோக்கில் கணக்கிட்டு, அங்கு ஒட்டிக்கொண்டு நிற்கின்றார்கள் போலும்.

ரிஷாட் பதியுதீனின் கட்சி சஜித் தரப்புடன் சங்கமம். ஆனால் அவரது

05▶






# 'சிவகங்கை' பயணிகள் கப்பல் நேற்றுத் தொடக்கம் சேவையில்

இந்திய இலங்கைப் படகுச் சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பல் நேற்று மாலை காங்கேசன்துறை துறை முகத்தை வந்தடைந்தது.

இந்தியா நாகப்பட்டினம் துறை முகத்தில் இருந்து இலங்கை காங் கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து நேற்று வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

41 பயணிகளுடன் இந்தக் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

வந்தடைந்த படகையும் பயணி களையும் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

சிவகங்கை என்ற பெயரில் புதிய பயணிகள் கப்பல், நாகப்பட்டினம் துறை முகத்திலிருந்து காலை புறப்பட்டு, காங்கேசன்துறைக்கு பிற்பகல் வந்தடைந்தது.

தொடர்ந்து கப்பல் அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டு நாளை காலை புறப்பட்டு பிற்பகல் நாகப்பட்டினம் துறைமுகத்தை சென்றடையும்.

இக் கப்பல் சேவை 18ஆம் திகதியி லிருந்து நாள்தோறும் நாகப்பட்டினத் திலிருந்து காலை 8 மணிக்கும், காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கும் கப்பல் இயக்கப்படும்.
















# சஜித்தை ஆதரித்ததால் ரிஷாத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை நிறுத்திய ஜனாதிபதி



(ந.லோகதயாளன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கப்பட்ட நிதிக்கான பணிகளை முன்னெடுக்க வேண்டாம் என்று மாவட்டச் செயலாளர்களுக்கு அவசர உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த விசேட கோரிக்கையின் பேரில் இலங்கையின் 8 மாவட்டங்களில் 56 கோடி ரூபா அனுமதிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 8 கோடி 80 இலட்சம் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 7 கோடி ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 கோடி 80 இலட்சம் ரூபாவுடன் வவுனியா, புத்தளம் மாவட்டங்களுக்கும் நிதிகள் அனுமதிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட நிதிகளுக்கான வேலைத்திட்டங்களை உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தின் கணக்காளர் எஸ்.ஏ.பி.குமாரி 2024.08.15 ஆம் திகதி கடிதம் மூலம் நிதி அனுமதிக்கப்பட்ட மாவட்டச் செயலாளர்களுக்கு எழுத்தில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

கடிதத்தின் பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், கணக்காய்வாளர் நாயகம் உள்ளிட்ட 8 பேருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# வயிற்று வலி காரணமாக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நபர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வயிற்றுக்குற்று காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆணொருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு பகுதியைச் சேர்ந்த முருகையா கிருபீபன் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 14ஆம் திகதி வயிற்றுக்குற்று காரணமாக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், வைத்தியசாலையில் வழங்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காததையடுத்து நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்துள்ளார்.



சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

கிருமித் தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று பிரேத பரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



# யாசகம் கேட்கும் பெண்ணொருவர் வாவியில் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மின்னேரிய யோத வாவியில் வீழ்ந்து பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் என்று மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மின்னேரிய நகருக்கு மிக அருகிலுள்ள யோத வாவியில் பெண்ணொருவர் தவறி வீழ்ந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் அடித்துச் செல்லப்படுவதனை அவதானித்த மின்னேரிய பொலிஸாரின் உயிர்காக்கும் படையினர் பெண்ணைக் காப்பற்ற எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

சடலமாக மீட்கப்பட்ட பெண் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், இவர் இந்தப் பிரதேசத்தில் யாசகம் கேட்பவர் என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர் என்று மின்னேரிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்சியின் எம்.பிக்களில் அவர் மட்டும்தான் அந்தப் பக்கத்தில் உள்ளார். மற்றைய மூன்று எம்பிக்களும் ரணில் பக்கம் கம்பி நீட்டி விட்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலும் அதே நெருக்கடி உண்டு. ஏற்கனவே அலிசாகிர் மௌலானா பல்டி அடித்து விட்டார். அந்தத் தரப்பில் இன்னொருவரும் பாய்வார் என்று பேச்சு அடிபடுகின்றது.

ரிஷாட் பதியுதீன் இறுதியாக சஜித்தின் பக்கம் என்று முடிவு செய்ததும், அவர் பரிந்துரையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்கள் அவ்வளவும் ஒரேடியாக வெட்டப்பட்டு விட்டன.

அதேபோன்று ஜனாதிபதியுடன் நெருங்கி ஊடாடி இப்படி தமது பிரதேசங்களுக்கு ஒதுக்கீடு பெற்ற கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நிதி வெட்டால் பெரும் குழப்பத்திலும் நெருக்கடியிலும் இருக்கின்றார் எனத் தகவல்.

இந்தக் குழப்பத்தை சமாளிப்பதற்காக அரசு தலைமையின் பக்கம் அவர் எந்நேரமும் அந்தர் பல்டி அடிக்கும் சாத்தியம் இருக்கின்றன என்கின்றன விடயம் அறிந்த வட்டாரங்கள்.

இப்படி சகாக்கள் பல்டி அடிப்பதனால் தனது பெயருக்கும் களங்கம் வந்து விடுமோ என்று அந்தரிக்கின்றார் - அங்கலாய்க்கின்றார் - திருகோணமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம்.எஸ். தௌபீக்.

கட்சியின் தீர்மானத்தின்படி சஜித் பிரேமதாஸாவின் வெற்றிக்காக உறுதியாக உழைப்போம், அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்று தௌபீக் உறுதிப்படுத்தி நிற்கின்றார்.

இவ்வாறு மறு தரப்பில் இருந்து எம்.பிக்களை வலை வீசிப் பிடிப்பதில் வேட்பாளர்களின் கட்சிகள், தரப்புகள் முனைப்பாக இருக்கும் அதே சமயம், பிரதான கட்சிகள் எல்லாம் முக்கிய அரசியல் தலைவர் ஒருவரைத் தம் பக்கம் வந்து விட வேண்டாம் என்று நெட்டித் தள்ளி ஒதுக்குவதில் குறியாக இருக்கின்றன.

அவர் வேறு யாரும் அல்லர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாதான்.

இப்போது கட்சியும் இன்றி, அணியும் இன்றி, மற்றைய கட்சிகளும் கூட்டுக்களும் தீண்டத் தகாதவராக ஒதுக்கப்படும் விட்டேத்தி நிலையில் - திரிசங்கு சொர்க்கம் போன்ற அந்தரத்தில் - அவர் சிக்கி இருக்கின்றார்.

ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு தர அவர் முன் வந்தார், நாங்கள் வேண்டாம் என்று கூறிவிட்டோம் என்று ரணில் தரப்பு பகிரங்கப்படுத்துகின்றது.

மைத்திரிபால சஜித்துக்கு ஆதரவு என்று வெளியான செய்தியை உடனடியாக விழுந்தடித்து மறுத்துரைக்கின்றது சஜித் தரப்பு. மைத்திரியை தம் பக்கம் சேர்க்க சஜித் தரப்பும் தயார் இல்லை என்பதுதான் இதன் அர்த்தம்.

மொட்டுக் கட்சியும் அவரை அரவணைக்கும் எண்ணத்தில் இல்லை.

அரசியலில் இப்போது அந்தகாரத்தில் சிக்குண்டு கலங்குகின்றார் அவர் என்பது உண்மைதான்.

## போதைப்பொருள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
குறிப்பிட பொதுமக்கள் வலியுறுத்த வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் பிரதிநிதிகள் இவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"சிகரெட் பாவனையால் எமது நாட்டில் வருடத்துக்கு இருபதாயிரம் பேரும், நாளொன்றுக்கு அறுபது பேரும் மரணிக்கின்றனர். மதுசாரப் பாவனையால் நாளாந்தம் 40 பேர் மரணிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளைத் தடுப்பதற்காகச் செயற்படும் நபர்களை மக்கள் தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்ய வேண்டும்.

மதுசாரம் மற்றும் சிகரெட் வரியினால் தான் அரசு நிலைநாட்டப்படுகின்றது என்கிற தவறான கருத்து பலரிடம் உள்ளது. உண்மையில் சிகரெட் மற்றும் மதுசார பாவனையில் ஏற்படும் சுகாதார துறை மற்றும் பொருளாதார துறைக்கு ஏற்படும் செலவு அதைவிட அதிகமாகும்.

எமது நாட்டில் விற்பனையாகும் சிகரெட்டை எடுத்துக்கொண்டால் அந்த நிறுவனத்தின் 92 வீதமான பங்குகள் பிரித்தானியா மற்றும் அமெரிக்க வல்லரசு நாடுகளுக்குச் சொந்தமானவை. இதனால் பெருமளவு டொலர் நாட்டை விட்டுச் செல்கின்றது.

மதுசாரத்தின் விலை அதிகரிப்பால் கசிப்பு விற்பனை அதிகரிப்பதாகப் பரப்பப்படும் தகவல் போலியானது.

போதைப்பொருள் விற்பனையாளர்கள், சிகரெட் மற்றும் மதுசார நிறுவனங்கள் என்பவற்றுடன் எந்தெந்த அரசியல்வாதிகளுக்குத் தொடர்புள்ளது என்பதை மக்கள் சரியாக இனங்காண வேண்டும்.

பொதுமக்கள் இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் போதைப்பொருள் மற்றும் மதுசார சிகரெட் பாவனைக்கு உட்படாத வகையில் வாழும் சூழலை உருவாக்க சிறந்த தலைவரை தெரிவு செய்ய வேண்டும்." - என்றனர்.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சி திட்ட அதிகாரி ஏ.சி.ரகீம், நிகழ்ச்சித் திட்ட அதிகாரி செல்லத்துரை நிதர்சனா, வட பகுதி இணைப்பாளர் ஆறுமுகம் கோடீஸ்வரன் ஆகியோர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

## சகோதரனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சாந்தை - பண்டத்தரிப்பு பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நேசராசா பனுசா என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த11ஆம்திகதிமேற்படிபெண்பொன்னாலை கிருஷ்ணன் கோயிலுக்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, தனது சகோதரனுடன் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு வந்து கொண்டிருந்த வேளை மாதகல் - பொன்னாலை வீதியில் அந்தப் பெண் தவறி திடீரென கீழே வீழ்ந்து மயக்கம் அடைந்துள்ளார்.

இந்நிலையில், அவர் சங்கானை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## நாமலை மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொழும்பில் உள்ள சர்வஜன கட்சியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை 39 பேர் போட்டியிடுகின்றார்கள். பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் சகாக்களாகவே ஒரு தரப்பினர் போட்டியிடுகின்றார்கள். கட்டுப்பணம் வைப்பிலிடும் தொகை குறைவானதால் எவ்வித வரையறைகளும் இல்லாமல் பலர் போட்டியிடுகின்றார்கள்.

1981ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பணம்தான் இன்றும் அமுலில் உள்ளது. பொருளாதாரப் பாதிப்புக்குப் பின்னர் வாழ்க்கைச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துள்ள நிலையில் கட்டுப்பண தொகை அதிகரிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கூட கைப்பற்றாத அரசியல் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகப் போட்டியிடுகின்றன. ஆகவே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிடும்போது அதற்கான வரையறைகள் அரசமைப்பு ஊடாக விதிக்கப்பட வேண்டும். மறுபுறம் சுயேச்சை வேட்பாளருக்கான கட்டுப்பணத்தை ஒரு கோடியாக அதிகரிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் யார் முன்னிலையில் உள்ளார்கள் என்று குறிப்பிட முடியாது. ஏனெனில் 22 சதவீத வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை இதுவரை தீர்மானிக்கவில்லை. இவர்களை இலக்காகக் கொண்டு பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

69 இலட்சம் மக்கள் ஆணை ராஜபக்ஷக்களின் குடும்பச் சொத்து அல்ல. சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்துக்காகவே 69 இலட்சம் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினார்கள். சுபீட்சமான கொள்கையைச் செயற்படுத்துவதை விடுத்து கோட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ - ஜூலிசங் கொள்கையைச் செயற்படுத்தினார். இதனால் நாட்டு மக்கள் அவரை விரட்டியடித்தார்கள்.

69 இலட்சம் மக்கள் ராஜபக்ஷர்கள் மீது வைராக்கியத்துடன் உள்ளார்கள். ஆகவே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ 3 சதவீத வாக்குகளைப் பெறுவது கூட சவால்மிக்கது. 97 சதவீதமான மக்கள் நாமலைத் தூக்கி வீசுவார்கள்."
- என்றார்.




# தேர்தல் திருவிழாச் செலவு

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் எண்ணிக்கை அதிகரிப்பதினால் தேர்தல் செலவும் பெருமளவு அதிகரிக்கின்றது என்ற கூற்றைப் பலரும் புரிந்து கொள்வதில்லை. அதன் அர்த்த பரிமாணத்தை தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரட்நாயக்கா தெளிவுபடுத்தி இருக்கின்றார்.

நாட்டின் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது ஆக ஆறே ஆறு வேட்பாளர்கள் மட்டும்தான் களத்தில் இருந்தனர். அதனால் வாக்குச்சீட்டின் நீளம் ஆக ஐந்து அங்குலம் மட்டும்தான். அந்த ஐந்து அங்குல வாக்குச் சீட்டுகளில் மொத்தம் 900 சீட்டுகளை ஒரு வாக்குப் பெட்டிக்குள் போடுவதற்கு இடம் இருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் - அதாவது 2019 தேர்தலில் - மொத்தம் 35 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். அதனால் வாக்குச் சீட்டின் நீளம் இரண்டு அடி இரண்டு அங்குலமாக - அதாவது 26 அங்குலமாக - அமைந்தது.

1982 தேர்தலில் ஒரு வாக்குப் பெட்டி அனுப்பிய ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு இந்த அளவு பெரிய வாக்குச்ச சீட்டாயின் மூன்று வாக்கு பெட்டிகளைத் தேர்தல் திணைக்களம் அனுப்ப வேண்டி இருக்கும்.

ஒரு வாக்களிப்பு நிலையத்துக்கு ஒரு வாக்கு பெட்டியுடன் சிரேஷ்ட வாக்களிப்பு அதிகாரி மற்றும் ஒரு பொலிஸ் பாதுகாவலரை அனுப்புவதாயின் அதற்கு ஒரு காரைப் பயன்படுத்த முடியும். ஒன்றுக்குப் பதிலாக மூன்று வாக்குப் பெட்டிகளாயின் நிச்சயம் காருக்குப் பதிலாக ஒரு வானை ஒழுங்குபடுத்த வேண்டி இருக்கும்.

வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பவும் திருப்பி வாக்கு எண்ணிக்கை நிலையங்களுக்கு எடுத்து வரவும் கார்களுக்கு பதிலாக பெரும் எண்ணிக்கையில் வான்களை தேர்தல் திணைக்களம் பெரும் செலவில் வாடகைக்கு அழைக்க வேண்டி இருக்கும்.

இந்தத் தடவை தேர்தலில் 39 வேட்பாளர்கள் என்பதால் வாக்குச்சீட்டு கடந்த தடவை இருந்ததைவிட சுமார் ஓர் அங்குலம் அதிகமாக - 27 அங்குல - நீளத்தில் இருக்கும் என்று கூறப்படுகின்றது.

இதே சமயம் நாட்டின் வாக்காளர்களின் 65 லட்சம் இல்லங்கள் உள்ளன என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேட்பாளரும் ஒரு கடிதத்தை ஒரு வாக்காளரின் இல்லத்துக்கு இலவசமாக அஞ்சல் செய்ய வசதி செய்யப்படுகின்றது. இந்தத் தேர்தலில் 39 வேட்பாளர்கள் உள்ளமையால் அவர்கள் அனைவருக்கும் தலா 65 லட்சம் இல்லங்களுக்கு வீட்டுக்கு ஒரு கடிதம் இலவசமாக அஞ்சல் செய்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய செலவின கடப்பாடு தேர்தல் திணைக்களத்துக்கு உண்டு.

வாக்களிப்பு நிலையங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வேட்பாளரும் தலா இரண்டு முகவர்களை நியமிக்க முடியும். அப்படி பார்த்தால் ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் 68 முகவர்களுக்கு இடம் ஏற்பாடு செய்ய வேண்டி இருக்கும்.

இதே பிரச்சினை வாக்கு எண்ணும் நிலையங்களிலும் உண்டு என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

2015ல் ஜனாதிபதி தேர்தலுக்கு 2.7 மில்லியன் ரூபா செலவானது. 2019 அது 4.4 பில்லியன் ரூபாவாக உயர்ந்தது. இம்முறை தேர்தலுக்கு அரசு இதுவரை 10 பில்லியன் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

ஆயினும் இறுதிச் செலவுக் கணக்கு அதைவிடவும் தாண்டுமென ஊகிக்கப்படுகின்றது.

எது,எப்படியென்றாலும் இந்தச் செலவுகள் எல்லாம் கடைசியில் அப்பாவி குடிமக்கள் தலையில்தான் கட்டப்படும் என்பது மட்டும் நிஜம்.



# கொல்கத்தா பெண் மருத்துவர் படுகொலை: பா.ஜ.க. நிர்வாகிகள் மௌன போராட்டம்

கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவரின் பாலியல் படுகொலைக்கு நீதி கேட்டு தமிழகம் முழுவதும் பா.ஜ.க. பெண் நிர்வாகிகள் நேற்று மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தினர்.

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் 31 வயது பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும், தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளைக் கண்டித்தும் நேற்று தமிழகம் முழுவதும் 66 இடங்களில் மெழுகுவர்த்தி ஏந்தி மௌன ஊர்வலம் நடைபெறும் என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை அறிவித்திருந்தார்.

இதையடுத்து, மௌன ஊர்வலம் நடத்துவதற்கான பணிகளை அந்தந்த மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மேற்கொண்டனர்.

ஆனால், மெழுகுவர்த்தி ஏந்தி மௌனஊர்வலம் செல்வதற்கு தமிழக பொலிஸ் அனுமதி வழங்கவில்லை. இதையடுத்து, அந்தந்த மாவட்ட பா.ஜ.க. அலுவலகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி பா.ஜ.க. மகளிர் அணி நிர்வாகிகள் பயிற்சி மருத்துவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

சென்னையில் கோடம்பாக்கம் அஜீஸ் நகரில் மாநில செயலாளர் பிரமிளா சம்பத் தலைமையில் பெண் நிர்வாகிகள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

நுங்கம்பாக்கத்தில் மத்திய சென்னை கிழக்கு மாவட்ட தலைவர் விஜய் ஆனந்த் தலைமையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதேபோல், சென்னையில் 6 இடங்களில், அந்தந்த மாவட்ட தலைவர்கள், மகளிர் அணி மூத்த நிர்வாகிகள் தலைமையில், பா.ஜ.க. பெண் நிர்வாகிகள் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.



# தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஓகஸ்ட் 27 அமெரிக்கா பயணம்

தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் எதிர் வரும் 27ஆம் திகதி அமெரிக்கா பயணிக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், செப்டெம்பர் 12 ஆம் திகதி வரை 17 நாள்கள் அங்கு தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக உயர்த்தும் இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் நிர்ணயித்துள்ளார்.

இதன் அடிப்படையில், பல்வேறு முயற்சிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக டுபாய், அபுதாபி, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் சென்று முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்தில் முதலீடு செய்ய வரும்படி அழைப்பு விடுத்தார்.

இதன் தொடர்ச்சியாக, அமெரிக்கா செல்லும் திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, எதிர்வரும் 27ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா பயணிக்கவுள்ளார்.





# மூன்றாம் உலகப் போர் நெருங்கியது; ரஷ்ய எம்.பி. ஷெரெமெட் எச்சரிக்கை

ரஷ்யாவில் உக்ரைனின் ஊடுருவலானது, மூன்றாம் உலகப் போர் நெருங்கியுள்ளதை சுட்டிக்காட்டுவதாக ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கூட்டாளியுமான மிகைல் ஷெரெமெட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ரஷ்யாவிற்குள் உக்ரைன் இராணுவம் ஊடுருவியது.

உக்ரைனிய படைகளின் இந்த ஊடுருவல் காரணமாக கிட்டத்தட்ட 120000 இற்கும் மேற்பட்ட மக்கள் குர்ஸ்க் பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன், அந்தப் பகுதியில் அவசர நிலையும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள சுட்ஜா நகரை உக்ரைன் படைகள் ஆக்கிரமித்துள்ளதாக தெரிய வந்துள்ள நிலையில், உக்ரைனின் இந்த நடவடிக்கைகள் மூன்றாம் உலகப் போருக்கு காரணமாக அமையும் என புடினின் சகாவான மிகைல் ஷெரெமெட் எச்சரித்துள்ளார்.

உக்ரைனின் இந்த நடவடிக்கைகளின் போது, தற்காத்துக் கொள்வதற்காக ரஷ்ய மண்ணில் பிரித்தானிய, அமெரிக்கா ஆயுதங்களை பயன்படுத்துவது, ரஷ்ய பொதுமக்கள் மீதும் உள்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவது, தாக்குதலில் வெளிநாட்டவர்கள் பங்கேற்பு என்பன அதற்கு மறுக்க முடியாத ஆதாரம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவை நிச்சயமாக மூன்றாம் உலகப் போருக்கான ஒத்திகை என்றும் மிகைல் ஷெரெமெட் தெரிவித்துள்ளார்.



# சமாதான பேச்சை ஆரம்பிக்கவே ரஷ்யா மீதான ஆக்கிரமிப்பு

## உக்ரைன் அதிகாரி கூறுகின்றார்

ரஷ்யாவுடன் நியாயமான சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தின் மீது உக்ரைன் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதியின் உதவியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

11 நாள்களுக்குப் பின்னர் உக்ரைன் பாதுகாப்பு தரப்பினரால் தொடர்ந்தும் அதனை தங்கள் வசம் வைத்துக் கொள்ளும் எண்ணம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், ரஷ்யாவின் நிலப்பரப்பினுள் உக்ரைன் இராணுவ முகாம் ஒன்றினை ஸ்தாபித்துள்ளது.

இதன் மூலம் அந்த பகுதியில் வாழும் மக்களின் உடனடி தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உக்ரைனின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிறிதொரு ரஷ்ய பிரதேசத்தில் உள்ள மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# வரலாற்றுப் பாரம்பரியமிக்க மருதங்கேணி கிராமத்தின் எல்லைகளை ஆக்கிரமித்து மாற்றியமைக்க சதி முயற்சி!

- மருதங்கேணியான் -

யாழ்ப்பாணம், வடமராட்சிக் கிழக்கின் நிர்வாக தலைமையிடமாக இருக்கும் வரலாற்றுப் பாரம்பரியமிக்க மருதங்கேணி கிராமத்தின் எல்லைகளை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராக மருதங்கேணி மக்களுக்கும் பொது அமைப்பினரும் தொடர்ச்சியாக போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மருதங்கேணி கிராம சேவகர் பிரிவில் (துஃ428) இருந்து தனி கிராம சேவகர் பிரிவாக தங்களை அடையாளப்படுத்த வேண்டும் என்று வடமராட்சிக் கிழக்கின் தாளையடி கிராம மக்கள் கோரியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைக்கு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. தாளையடி மக்களின் தனி உரிமை சார்ந்து அவர்களின் தனிக் கிராமக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், தாளையடி கிராமம் என்பது, கத்தோலிக்க மதத்தினர் வாழும் பகுதியாகும். அதன் நிலப்பரப்பு மிகவும் சிறியது. தற்போது, அங்கு 141 குடும்பங்களே வாழ்ந்து வருகின்றனர். ஆனால், தாளையடியை தனிக் கிராமமாக மாற்றும் முயற்சிகளின் போக்கில், மருதங்கேணியின் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமிக்கும் சதி முயற்சிகளை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தியும் இன்னும் சில தரப்பினரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

மருதங்கேணி கிராமத்தில் 95 வீதமான மக்கள் சைவ சமயத்தை பின்பற்றுபவர்கள். அவர்களின் கோவில்கள், வளவுகள், வயல்கள், கடற்கரை உள்ளிட்ட பெரும் பகுதிகளையும் ஆக்கிரமித்து தான்தோன்றித்தனமாக எல்லைகளை வரையறுத்து தாளையடியாக அறிவிக்கும் வகையிலான கடிதமொன்றை, வடமராட்சிக் கிழக்கின் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளருக்கு எழுதியிருக்கின்றார். கடந்த ஜுலை மாதம் 07ஆம் திகதி இந்தக் கடிதத்தை அவர் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகள் தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடல்களையும் செய்யாது, இரகசியமான முறையில், பிரதேச செயலாளர் எல்லைகளை வரையறை செய்துள்ளார்.

இந்தச் சதி முயற்சிக்கு எதிராக மருதங்கேணி மக்கள் வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகத்தின் முன்னால், தொடர்ச்சியாக இரு நாள்கள் போராட்டங்களை நடத்தினார்கள். அப்போது, பிரதேச செயலாளர், தாளையடி கிராமத்துக்கான எல்லைகளை வரையறுத்துத் தான் எந்தவித கடிதங்களையும் மாவட்டச் செயலாளருக்கு எழுதவில்லை என்று கூறினார். ஆனால், அவர் எழுதிய கடிதத்தின் பிரதிகளை, மருதங்கேணி மக்கள் அவரிடம் காண்பித்து விளக்கம் கோரிய போது, அவர் எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டார்.

இந்த அதிகார துஷ்பிரயோகம் பாரம்பரிய சிறப்பு மிக்க மருதங்கேணியின் மீது விடுக்கப்படும் பெரும் அச்சுறுத்தலாகும் என அப்பகுதி மக்கள் சீறுகின்றனர்.

மருதங்கேணி கிராம எல்லைக்குள், வடமராட்சிக் கிழக்கு பிரதேச செயலகம், பிரதேச வைத்தியசாலை, பொது விளையாட்டு மைதானம் போன்ற முக்கிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. ஆனால், தாளையடி கிராமத்துக்கான எல்லையை, தான்தோன்றித்தனமாக பிரதேச செயலாளர் குறித்துள்ள எல்லைகள் மருதங்கேணிக்குள் இருக்கும் மேற்கண்ட முக்கிய நிறுவனங்கள், மற்றும் பிரதேசங்களையும் தாளையடியாக அறிவிக்கும் நோக்கிலான கபடத் தனத்தை கொண்டிருக்கின்றது.

தாளையடி தனிக் கிராமத்துக்கான எல்லை வரையறை தொடர்பில், மருதங்கேணி மக்களுடன் எந்தவித கலந்துரையாடலும் பிரதேச செயலகத்தினாலோ, எல்லை வரையறை தொடர்பிலான பிரிவினராலோ மேற்கொள்ளப்படவில்லை. மருதங்கேணி மக்களுக்கு தெரியாமல், மறைமுகமாக மருதங்கேணியின் பெரும் நிலப்பகுதியை அபகரித்து புதிய கிராமமாக அறிவிக்கும் நோக்கமே, பிரதேச செயலாளரிடத்திலும், அவரோடு இணைந்து இவ்வாறான சதி முயற்சிகளில் ஈடுபடுவோரிடத்திலும் காணப்படுகின்றது. இந்த சதி முயற்சிகளை உடனடியாக நிறுத்துமாறு மருதங்கேணி மக்களும், பொது அமைப்புக்களும் வலியுறுத்துகின்றன.

மருதங்கேணி மக்கள் மதசார்பின்மையோடு சமத்துவமும் சகோதரத்துவமும் கொண்ட வாழ்க்கை நெறியைக் கொண்டவர்கள். அவர்களை, தாளையடி கிராமத்து மக்களோடு முரண்பட்டு மோத வைக்கும் வகையிலான சதித் திட்டமும் மருதங்கேணி கிராமத்தின் நிலப்பகுதிகளை அபகரித்துத் தாளையடியாக அறிவிக்கும் சதித் திட்டத்தின் பின்னால் இருப்பதாக மருதங்கேணி மக்கள் அச்சப்படுகின்றனர். இவ்வாறான சதி நடவடிக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ஆகியோர் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று மருதங்கேணி மக்கள் கோருகிறார்கள்.



# நேற்று குருநாகலில் சஜித்தின் கூட்டத்தில் மக்கள் வெள்ளம்!







# நேற்று குருநாகலில் சஜித்தின் கூட்டத்தில் மக்கள் வெள்ளம்!














# அத்தியாவசியத் தேவைக்கு மாத்திரம் கடவுச்சீட்டை பெறுமாறு கோரிக்கை

அத்தியாவசிய தேவை தவிர்ந்து கடவுச்சீட்டுக்களைப் பெறுவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கிறார் என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அறிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கள் ஒக்டோபர் மாத இறுதிக்குள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதால் சில நாடுகள் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களைக் கோருவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன எனவும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் 50 லட்சம் இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் ஹர்ஷ இலுக்பிட்டிய குறிப்பிட்டுள்ளார்.






# நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை; 3 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கடும் மழை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் இது குறித்து அவதானத்துடன் இருக்குமாறு திணைக்களம் அறிவித்துள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் மேற்படி பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக்கூடும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடிமின்னல், மழையுடன் கூடிய தற்காலிக பலத்த காற்று வீசும். மின்னல் தாக்கங்களால் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, கடும் மழை காரணமாக கொழும்பில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால், நேற்று இரவு பல இடங்களில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இதேவேளை, நிலவும் அதிக மழையுடனான காலநிலை காரணமாக மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, காலி, களுத்துறை மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தின் நெலுவ, எல்பிட்டிய, நாகொட, யக்கலமுல்ல பிரதேசங்களுக்கும், களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, மதுகம மற்றும் மாத்தறை மாவட்டத்தின் பிடபெத்தர ஆகிய இடங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு நேற்று இரவு 7.30 மணி முதல் இன்று இரவு 7.30 மணி வரை செல்லுபடியாகும் என தேசிய கட்டட மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவுக்குக் காணிகளை தாரை வார்க்காதே என திருமலை முத்து நகரில் மக்கள் கவனவீர்ப்புப் போர்



திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்து நகர் பகுதியில் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனங்களுக்கு மக்கள் காணிகளை துறைமுக அதிகார சபையினர் குத்தகைக்கு விடவோ அபகரிப்பு செய்யவோ கூடாது என மக்கள் கவனவீர்ப்பில் நேற்று ஈடுபட்டனர்.

'இந்தியாவிற்கு காணிகளை விற்காதே!', 'எங்கள் நிலம் எங்களுக்கு!' போன்ற வாசகங்களை ஏந்தி முத்து நகரில் அந்தப் பகுதி மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கப்பல் துறை , முத்து நகர் போன்ற பகுதியில் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர் இக் காணிகள் இலங்கை துறை முக அதிகார சபைக்கு சொந்தமானது எனத் தெரிவித்து அவற்றை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்க வேண்டாம் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.

இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அதப் பகுதிக்குள் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது என திருகோணமலை நீதிமன்ற நீதவானால் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என சீனக்குடா பொலிஸார் கூறுகின்றனர். நால்வர் பெயரைக் குறிப்பிட்டுத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக இந்தக் கவனவீர்ப்பில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் ராசிக் றியாஸ்தீன் தெரிவித்தார்.

குறித்த முத்து நகர் மற்றும் கப்பல் துறை பகுதிகளில் மக்கள் 1972 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் அரசினால் குடியேற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

விவசாயத்தை நம்பி வாழும் மக்களை தற்போது எழுப்பி, இந்தியாவுக்கு மின்சார காற்றாலை உற்பத்திக்கு நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது மக்களை நசுக்கும் செயலாகும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மேலும் தெரிவித்தார்.



# மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவாராம் சஜித்

## தலதா மாளிகையில் வழிபாடுகளின் பின் அவர் தெரிவிப்பு

"தமது அரசாங்கத்தின் கீழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளேன்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் நேற்று காலை கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாம் இதுவரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து ஆற்றிய சேவைகள் குறித்து இன்று மகாநாயக்க தேரர்களுக்கு அறிவித்தேன்.

மக்களுக்கு தற்போது செலவினம் அதிகரித்துள்ளதே, தவிர வருமானம் அதிகரிக்கவில்லை. அதனை தமது அரசாங்கத்தில் மாற்றியமைக்கவுள்ளது."– என்றார்.





# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு வவுனியாவில் புதிய பிராந்திய அலுவலகம்

## நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

(கே.வசந்தன்)

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் புதிய பிராந்திய அலுவலகம் வவுனியாவில் வவுனியா – மன்னார் வீதியில்காமினிமகாவித்தியாலயத்திற்கு முன்பாக நேற்றுத் திறந்து வைக்கப் பட்டது.

இந்தப் பிராந்திய அலுவலகம் வவு னியா, உள்வட்ட வீதியில் செயற்பட்டு வந்த நிலையில் போதிய இடவசதி மற்றும் ஏனைய வசதிகள் இன்மையால் கடந்த 2 ஆம் திகதி முதல் அவ் அலு வலகத்தின் செயற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இதனையடுத்து, புதிய அலுவலகம் போதிய வசதிகளுடன் 24 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டு சேவைகளும் மீள ஆரம்பித்து வைக் கப்பட்டன. இதன்போது குடிவரவு, குடியகல்வு திணைக்கள சேவைகளைப் பெறுவதற்கு அதிக எண்ணிக்கையான மக்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிகழ்வில் குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், ஆள்பதிவுத் திணைக்கள வவுனியா பிராந்திய அலுவலகப் பணிப்பாளர் கிருபாகரன், பொலிஸ் அதிகாரிகள், மதத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.













# அலி சாஹீர் மௌலானா ஜனாதிபதிக்கு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கவுள்ளார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹீர் மௌலானா அறிவித்துள்ளார்.

நேற்று மதியம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து அவர் தமது ஆதரவை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் நஷீர் அஹமட்டின் நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்தானமையை அடுத்து நாடாளுமன்ற உறுப்பினராக அலி ஸாஹீர் மௌலானா பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை மின்சார சபையில் உள்ளக மறுசீரமைப்பு அவசியம்

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு


இலங்கை மின்சார சபையில் உள்ளக மறுசீரமைப்பு அவசியம் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரத்துறை தொடர்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“மின்சாரத்துறையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் நிலவுகின்றன.

அவற்றை நிவர்த்திக்க வேண்டுமாயின் உள்ளக மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதன்மூலம் லாபம் ஈட்டும் நிறுவனமாக இலங்கை மின்சார சபையை மாற்ற முடியும்.” – என்றார்.





# நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியானால் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பிரதமர்

## உதயங்க வீரதுங்க தகவல்

"நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரது தலைமையில் உருவாக்கப்படும் அரசாங்கத்தில் பிரதமர் பதவி ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கே வழங்கப்படும்."

– இவ்வாறு ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில் –

"வெற்றி பெறுவதற்கு முன்னரே பதவிகள் தொடர்பில் கட்சிக்குள் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன.

இந்த நிலையில், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படுகின்றன.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பின்தள்ளும் முயற்சியிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இறங்கியுள்ளது.

எவ்வாறாயினும், புதிய ஆய்வுகளின் படி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் இருக்கின்றார்."

– என்றார்.




# எந்த வேட்பாளரையும் ஆதரிப்பதற்கு மைத்திரி தீர்மானிக்கவேயில்லையாம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு வேட்பாளருக்கும் ஆதரவளிக்கத் தாம் தீர்மானிக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அறிக்கையொன்றினூடாக அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தன்னைப் பற்றி சிலர் வெளியிடும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை எனவும் மைத்திரிபால சிறிசேன தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள பிரச்சினை தற்போது நீதிமன்றில் இருப்பதாகவும், கட்சியின் தலைவர் யார் என்பது தொடர்பில் நீதிமன்றம் இன்னும் தீர்மானம் வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# கைதி ஒருவர் தப்பியோட்டம்

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த கைதி ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

பொலன்னறுவை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் என வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தப்பிச்சென்ற கைதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் இராணுவம் ஈடுபட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து 34 தரப்பினர் 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் ஒப்பம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து 'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் 34 தரப்புக்களைச் சேர்ந்தவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு பத்தரமுல்லையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

மஹஜன எக்சத் பெரமுனவை பிரதி நிதித்துவப்படுத்தி பிரதமர் தினேஷ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, புதிய கூட்டமைப்பை பிரதிநிதித் துவப்படுத்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இரா ஜாங்க அமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா, தேசிய சுதந்திர முன்ன ணியின் மொஹமட் முஸம்மில், இலங்கை தேசியத் தோட்டத் தொழி லாளர் சங்கத்தின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எஸ்.எம்.எம்.முஷாரப் முதுநபீன், இஷாக் ரஹ்மான், அலி சப்ரி ரஹீம், சத்துர சேனாரத்ன, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, ஈரோஸ் கட்சியின் செயலாளர் நாயகம் ராஜநாதன் பிரபாகரன், இலங்கை ஜனநாயக கட்சியின் அன்வர் எம்.முஸ்தபா, தமிழ் தேசிய முற்போக்கு கட்சியின் கே.கே.உமாபதி உள்ளிட்ட 34 தரப்புக்களைச் சேர்ந்தவர்கள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத் துடன்'இயலும் ஸ்ரீலங்கா'உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.



# மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக ராஜகருணா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி னால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் ஆர். எம். சோபித ராஜகருணா நியமிக்கப்பட்டுள் ளார். அவர் நேற்று ஜனாதிபதி அலுவ லகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றிய நிஸ் ஸங்க பந்துல கருணாரத்ன, வெளிநாடு சென்றுள்ள நிலையில் அவர் நாடு திரும்பும் வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக்கவும் கலந்துகொண்டார்.

# எம்.பிக்களுக்கு மேலதிக துப்பாக்கியை வழங்குவதற்கான விண்ணப்பம் கோரல்



ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகளை வழங்குவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விண்ணப்பங்களை கோருவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர் பாதுகாப்பிற்காக கைத்துப்பாக்கிக்கு மேலதிகமாக ரிப்பீட்டர் ரக துப்பாக்கியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சு கூறியுள்ளது.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் ரிப்பீட்டர் ரக துப்பாக்கிகளை வழங்க முடியுமென பாதுகாப்பு அமைச்சினால் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர கருத்து தெரிவிக்கையில், தற்போது 5 நாடாளுமன்ற உறுப்பினர்களால் ரிப்பீட்டர் ரக துப்பாக்கிக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்டணம் அறவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.



# குரங்கம்மை குறித்து வழிகாட்டல் கோவை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

Mpox எனப்படும் குரங்கம்மை தொற்று தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்ட பின்னர் இலங்கைக் கான வழிகாட்டல் கோவையை வெளி யிடவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குரங்கம்மைத் தொற்று தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் கடந்த புதன்கிழமை உலகளாவிய ரீதியில் அவசரநிலை பிரகடனப்படுத் தப்பட்டது.

இந்நிலையில் வைரஸ் தொற்று நாட்டிற்குள் பரவாமல் இருப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முதற்கட்ட பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச் சின் பொது சுகாதாரம் தொடர்பான பிரதி பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.ஆனல்ட் தெரிவித்துள்ளார். குரங்கம்மைத் தொற்று தற்போது மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்க வலய நாடுகள் முழுவதும் பரவியுள்ளது. குரங்கம்மை தொற்றினால் இது வரை 461 மரணங்கள் பதிவாகியுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 17.08.2024


மேஷம்

இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.


ரிஷபம்

உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கியமான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணி யின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.


மிதுனம்

ஆன்மீகத்திற்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.


கடகம்

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிகவும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.


சிம்மம்

உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர் வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்திகரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.


கன்னி

இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணிகளை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.


துலாம்

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவனமாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.


விருச்சிகம்

இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ளவேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவுகளை இன்று எடுப்பது உசிதமல்ல.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.08.2024

## தனுசு

தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பராம ரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத்தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்பட லாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும். இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கும்பம்

உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.

## மகரம்

உங்களுக்கு பயன் தரும் வகை யிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத் துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். .

## மீனம்

உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்க ளுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்காது. பணியில் ஏற்படும் தவறுகளால் கவலை கொள்வீர்கள். எச்சரிக்கை தேவை.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. இன்று பணத்தை சிறப்பாக கையாள முடியாத சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.



